**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

முறையீட்டு மனு எண்.319/மா/2023
நாள் 05.12.2024

திரு.R. மயில்சாமி, ................ முறையீட்டு மனுதாரர்
மதுரை.

1) உதவி ஆணையர், ................ எதிர் மனுதாரர்கள்
மண்டலம் 5
மதுரை மாநகராட்சி

2) திரு. R.அன்பழகன்,
உரிமையாளர்,
எஸ். இராமானுஜம் நல்லம்மாள் திருமண மண்டபம்,
மதுரை – 625 011

மதுரை புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R.மயில்சாமி என்பவரின் 18.09.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 12.10.2023 அன்று பெறப்பட்டு, 319/மா/2023, என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது

## ஆணை

மதுரை புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, பிளாட் எண்.5 என்கிற முகவரியில் வசிக்கும் திரு.R.மயில்சாமி என்பவர் தன்னுடைய 18.09.2023 நாளிட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“மதுரை மாநகராட்சி, மண்டலம் 5 (மேற்கு), வார்டு எண்.81, கதவு எண்.123, பாரதியார் ரோடு, சோலை அழகுபுரம் நீதிராஜன் பாரதியார் துவக்கப்பள்ளி அருகில் உள்ள எஸ்.இராமானுஜம் நல்லம்மாள் திருமண மஹால் (SRN மஹால்) கட்டிடம் வாகனங்கள் நிறுத்துவதற்கு சிறிதளவு இடம் கூட விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இதனால் விசேஷங்களுக்கு வரும் நபர்கள் தங்களது இரண்டு, மூன்று மற்றும் நான்கு சக்கர வாகனங்களை ரோட்டில் நிறுத்துவதால் கடுமையான வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு விபத்துக்கள் ஏற்படுகிறது. மேலும், இச்சாலையில் செல்லும் பள்ளி மாணவ, மாணவியர்கள், பெரியோர்கள், மற்றும் தண்ணீர் வாகனம், ஆம்புலன்ஸ் ஆகியவை செல்ல முடியாத சூழ்நிலை ஏற்படுகிறது. மேற்கண்ட திருமண

மண்டப கட்டிடத்திற்கு அரசு விதிகளின்படி நான்குபுறமும் இடைவெளி விடாமலும், அவசர கால வழி விடாமலும் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளது. மேலும், மேற்படி கட்டிடம் பொதுமக்களின் பயன்பாட்டு கட்டிடம் என்பதால் 1973–ஆம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 33–ன்படி நகர் ஊரமைப்பு திட்ட இயக்ககத்தின் ஒப்புதல் பெறப்படவில்லை. மேலும் தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965–ன்படி வருவாய் துறையிடம் உரிமம் பெறப்படவில்லை.

எனவே, சட்டத்திற்கு புறம்பாக மேற்படி கல்யாண மண்டப கட்டிடத்தின் மீது நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன் பிரிவுகள் 56(1) மற்றும் 57–ன் உடன் படிக்கப்பட்ட பிரிவு 85–ன் கீழ் Stop work notice/notice calling for approved plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்படவேண்டிய Lock and Seal and demolition notice-ம் வழங்கவும், கடமை தவறிய மதுரை மாநகராட்சி மண்டலம் 5–ன் முன்னாள் மற்றும் இந்நாள் அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

2. மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு இம்முறைமன்ற நடுவ 25.10.23 நாளிட்ட அறிவிக்கை மூலம் மதுரை மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. மதுரை மாநகராட்சி, மண்டலம் 5–ன் உதவி ஆணையர் தன்னுடைய 21.11.2023 மற்றும் 11.11.2024 நாளிட்ட அறிக்கைகளில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

“இந்நேர்வு தொடர்பாக உதவிப்பொறியாளரின் 15.11.2023 நாளிட்ட குறிப்பின்படி எஸ்.இராமானுஜம் நல்லம்மாள் திருமண மண்டபம் உரிமையாளருக்கு ஆவணங்கள் மற்றும் பதிவுகளை வழங்கக்கோரி அறிவிப்பு நேரில் சமர்ப்பிக்கப்பட்டது. மேலும், மேற்காணும் இருக்கை எழுத்தர் தற்காலிக பணி நீக்கத்தில் இருந்து வருவதால், தமிழ்நாடு முறைமன்ற நடுவ 24.10.2024 நாளிட்ட கடிதத்தில் பெறப்பட்ட புகார் மனுவின் அடிப்படையில், நடவடிக்கை எடுக்கும் பொருட்டு, கள ஆய்வு செய்யப்பட்டதின்படி விதி மீறல் கட்டிடம் குறித்து தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (தமிழ்நாடு விதி 35) 2022–ல் திருத்தப்பட்டது – பிரிவு 135(1, 2)–ன் கீழ் அனுமதியின்றி கட்டப்பட்டு வரும் கட்டிடத்திற்கு /அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்திற்கு மாறுதலாக கட்டி இருக்கும் கட்டிடத்திற்கு வழங்கப்பட்ட அறிவிப்பு கட்டிட உரிமையாளருக்கு நேரில் சார்பு செய்யப்பட்டது. அதனை தொடர்ந்து மேற்கண்ட கல்யாண மண்டப உரிமையாளர் விதி மீறல் கட்டிடத்தை முறைப்படுத்துவதற்கு போதுமான கால அவகாசம் கோரியுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

4. இம் மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றத்தில் 12.11.2024 அன்று நடைபெறும் நேரடி விசாரணைக்கு ஆஜராகுமாறு கோரி 24.10.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 12.11.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

மதுரை மாநகராட்சி, மண்டலம் 5 (மேற்கு), வார்டு எண். 81, கதவு எண்.123 பாரதியார் ரோடு, சோலை அழகுபுரம் நீதிராஜன் பாரதியார் துவக்கப்பள்ளி அருகில் உள்ள எஸ்.இராமானுஜம் நல்லம்மாள் திருமண மஹால் (SRN மஹால்) கட்டிடம் வாகனங்கள் நிறுத்துவதற்கு சிறிதளவு இடம் கூட விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. இதனால் விசேஷங்களுக்கு இரண்டு, நான்கு சக்கர வாகனங்களில் வருவோர் ரோட்டில் நிறுத்துவதால் கடுமையான வாகன

போக்குவரத்து நெரிசல் எற்பட்டு விபத்துகள் எற்படுகிறது. மேலும் பள்ளி கல்லூரி மாணவியர், மாணவர்கள், சிறியவர்கள், பெரியோர்கள், ஆம்புலன்ஸ் வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டு வருகிறது.

(1) மேற்கண்ட திருமண மண்டபத்தின் கட்டிடத்திற்கு அரசு விதிகளின்படி நான்குபுறமும் இடைவெளி (set back space) விடாமலும், அவசர காலவழி (emergency exit) இல்லாமலும், சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும் சட்டத்திற்கு புறம்பாக கட்டடம் கட்டப்பட்டுள்ளது. 100% சதவிகிதம் (Violation) மாறுபட்டுள்ளது.

(2) சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட மேற்கண்ட திருமண மஹால் மீது நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன்படி 56 (1) மற்றும் 57–ன் உடன்படிக்கப்பட்ட பிரிவு 85–ன் கீழ் Stop work notice/calling for approved plan அறிவிப்பினையும், அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிடும் Lock and Seal and demolition தாக்கீதும் வழங்க வேண்டும்.

(3) சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட மேற்கண்ட கட்டிடத்தை கண்காணிக்க தவறிய மதுரை மாநகராட்சி, மண்டலம் 5–ன் முன்னாள் மற்றும் இந்நாள் உதவி ஆணையர்கள், மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது கடுமையான ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு இம் முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

6. மதுரை மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவி ஆணையர் மற்றும் உதவி நகர திட்டமிடலர் ஆகியோர் 12.11.2024 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு பதிவு செய்துள்ளனர்.

(1) மனுதாரரின் புகார் மனுவின் அடிப்டையில், மனுதாரர் குறிப்பிட்டுள்ள எஸ். இராமானுஜம் நல்லம்மாள் திருமண மண்டப உரிமையாளருக்கு ஆவணங்கள் மற்றும் பதிவுகள் வழங்கக்கோரி கடிதம் நேரில் அளிக்கப்பட்டது.

(2) மேற்கண்ட கல்யாண மண்டபம் கள ஆய்வு செய்யப்பட்டதில் விதி மீறல் அறியப்பட்டது. எனவே, அனுமதியின்றி கட்டப்பட்டு வரும் கட்டிடத்திற்கு/அங்கீகரிக்கப்பட்ட வரைப்படத்திற்கு மாறுதலாக கட்டி இருக்கும் கட்டிடத்திற்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (தமிழ்நாடு விதி 35) 2022ல் திருத்தப்பட்டது பிரிவு 135 (1, 2)–ன் கீழ் கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு நேரில் சார்பு செய்யப்பட்டுள்ளது.

(3) மேற்கண்ட அறிவிப்பு சார்பு செய்யப்பட்டதை தொடர்ந்து கட்டிட உரிமையாளர் விதி மீறல் கட்டிடத்தை முறைப்படுத்துவதற்கு போதுமான கால அவகாசம் கோரியுள்ளார்.

(4) கட்டிட உரிமையாளருக்கு அறிவிப்பு சார்பு செய்யப்பட்ட நகலினை இம்முறைமன்றத்தின் முன் சமர்ப்பிக்கிறேன்.

மேலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ள விதி மீறல் கட்டிடம் குறித்து நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன்படியும் உரிய சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இம்முறைமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறோம் என்று தெரிவித்துள்ளனர்.

7. எதிர்மனுதாரரான எஸ்.இராமானுஜம் நல்லம்மாள் திருமண மண்டபத்தின் உரிமையாளர் அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை.

எனினும் எஸ்.இராமானுஜம் நல்லம்மாள் திருமண மஹாலின் உரிமையாளர் திரு.ஆர். அன்பழகன் அவர்கள் தன்னுடைய 08.11.2024 நாளிட்ட கடிதத்தில் "எனக்கு சொந்தமான இடத்தில் 10 ஆண்டுகளுக்கு முன்பு அன்றைய நகராட்சி நிர்வாக ஆணைய விதிகளுக்குட்பட்டு வணிகக்கட்டிடத்திற்கான கட்டிட அனுமதி முறைப்படி பெற்று கட்டி முடிக்கப்பட்டு கட்டிடத்திற்கு முழுமையான வணிகக்கட்டிடத்திற்கான வரி தற்போது வரை செலுத்தி வருகிறேன் என்றும், மேலும் மாநகராட்சி அலுவலகத்திற்கு ஏற்கனவே இருமுறை அனுமதி ஆவணங்களை ஒப்படைத்து விளக்கமும் அளித்து விட்டேன் என்றும், இதற்குண்டான வாகன நிறுத்துமிடம் இந்த கட்டிடத்திற்கு எதிர்புறம் கதவு எண்.228–ல் எனது பெயரில் உள்ள இடத்தில் உள்ளது என்றும், எனவே எனது உடல்நிலை நலன் கருதி நீண்ட தூர பயணத்தை தவிர்த்து இந்த தகவல் தங்களுக்கு கடிதம் வாயிலாக சமர்ப்பிக்கின்றேன் என்று தெரிவித்துள்ளார்".

8. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, வாக்குமூலம், மதுரை மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவி ஆணையரின் அறிக்கை/வாக்குமூலம், உதவி நகர திட்டமிடலரின் வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரான எஸ்.இராமானுஜம் நல்லம்மாள் திருமண மண்டபத்தின் உரிமையாளரின் கடிதம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

மனுதாரர் மதுரை மாநகராட்சி, மண்டலம் 5, வார்டு எண் 81, கதவு எண்.123 பாரதியார் ரோடு, சோலை அழகுபுரம் நீதிராஜன் பாரதியார் துவக்கப்பள்ளி அருகில் உள்ள எஸ்.இராமானுஜம் நல்லம்மாள் திருமண மஹால் (SRN மஹால்) கட்டிடம் வாகனங்கள் நிறுத்துவதற்கு போதிய இடவசதியில்லாமலும், அரசு விதிப்படி நான்குபுறமும் இடைவெளி விடாமலும் அனுமதிக்கு மாறாகவும், கூடுதலாகவும் சட்டத்திற்கு புறம்பாகவும் கட்டப்பட்டுள்ளது என்றும், எனவே அக்கட்டிடத்தின் மீது தமிழ்நாடு நகர்ப்புற ஊரமைப்பு சட்டம்1971–ன்படி நடவடிக்கை எடுக்கவும், இது குறித்த தனது புகார் மனுவின் மீது நடவடிக்கை எடுக்காத மதுரை மாநகராட்சி, மண்டலம் 5–ன் சம்பந்தப்பட்ட அலுவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

மனுதாரர் குறிப்பிட்டுள்ள எஸ்.இராமானுஜம் நல்லம்மாள் திருமண மண்டபத்தின் உரிமையாளருக்கு ஆவணங்கள் மற்றும், பதிவுகள் வழங்கக்கோரி கடிதம் வழங்கப்பட்டுள்ளதும், களஆய்வில் விதி மீறல் கண்டறியப்பட்டதால், வரைபடத்திற்கு மாறுதலாக கட்டி இருக்கும் கட்டித்தின் உரிமையாளருக்கு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (தமிழ்நாடு விதி 35) 2022–ல் திருத்தப்பட்டது, பிரிவு 135 (1,2)–ன் கீழ் அறிவிப்பு சார்பு செய்யப்பட்டது என்பதும், மேலும், விதி மீறல் கட்டிடத்தின் மீது நகர் ஊரமைப்பு சட்டம் 1971–ன்படி சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும், விதிமீறல் கட்டிடத்தின் உரிமையாளர் விதிமீறல் கட்டிடத்தை முறைப்படுத்துவதற்கு போதுமான கால அவகாசம் கோரியுள்ளது என்பதும், மதுரை மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவி ஆணையரின்அறிக்கை, வாக்குமூலம் மற்றும் உதவி நகர திட்டமிடலரின் வாக்குமூலம் ஆகியவற்றின் மூலம் அறிய முடிகிறது.

மேலும், எஸ். இராமானுஜம் நல்லம்மாள் திருமண மண்டபத்தின் உரிமையாளர் நகராட்சி நிர்வாக ஆணைய விதிகளுக்குட்பட்டு வணிகக்கட்டிடத்திற்கான கட்டிட அனுமதி பெற்றுள்ளதாகவும், அதற்கான வரி தற்போது வரை செலுத்தி வருவதாகவும், வாகன வசதி மேற்கண்ட திருமண மண்டபம் எதிரே தனது பெயரில் உள்ள இடத்தில் அளிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில் குறிப்பிட்டப்பட்டுள்ள SRN மஹாலினை மாநகராட்சி அலுவலர்கள் நேரில் கள ஆய்வு செய்து விதிமீறல் கண்டறியப்பட்டதால், மாநகராட்சியால் கட்டிடத்தின் உரிமையாளருக்கு நோட்டீஸ் அனுப்பப்பட்ட நிலையில், மேற்கண்ட கட்டிடம் மீது தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998–ன்படி உரிய தொடர் நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி மண்டலம் 5–ன் உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது,

2024ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 05–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. ஆர். மயில்சாமி,
பிளாட் எண். 5 அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி,
மதுரை 625 018

2) ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
அறிஞர் அண்ணா மாளிகை,
தல்லாகுளம்,
மதுரை 2.

3) உதவி ஆணையர்,
மண்டலம் 5,
மதுரை மாநகராட்சி,
TPK Old Municipal Office,
மதுரை 5

4)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75 சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 28

5) இணை இயக்குநர்,
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண். 75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை 28.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

சட்ட ஆலோசகர்/செயலாளர் (FAC).